**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**சுய கற்றல் கையேடு - 2020**
**நாடகமும் அரங்கியலும்**

**தரம் 8**

## முதலாம் தவணை

## எழுத்துரு

- நாடகம் என்பது சம்பவங்களின் தொடராகும்.
- சம்பவங்களை அல்லது கதையைப் பின்னப்படும் முறை 'கதையோட்டம்' அல்லது 'கதைப் பின்னல்' எனப்படும். இக் கதைப் பின்னல் ஒரு கருப்பொருளைக் கொண்டிருக்கும்.
- இது நடந்த, நடந்து கொண்டிருக்கின்ற, கற்பனை சார்ந்த விடயமாகக் காணப்படும்.
- இதனடிப்படையில் வரிவடிவமாக (எழுத்துவடிவமாக) எழுத்துரு எழுதப்படும்.
- நாடகம் என்பதன் **அருவ வடிவமே** எழுத்துரு ஆகும்.
- எழுத்துரு நாடகாசிரியரால் எழுதப்படும்.
- எழுத்துருவொன்றில் கதை, கரு, பாத்திரம், மோதுகை, கதைப்பின்னல் என்பன காணப்படும்.
- இவை தவிர- சொல்லாடல்கள், நடிகரின் செயற்குறிப்புக்கள், மேடைக் குறிப்புக்கள், காட்சியமைப்புக் குறிப்புக்கள், ஒளிக் குறிப்புக்கள், இசைக் குறிப்புக்கள் எனப் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

## நாடக எழுத்துருவின் கூறுகள்

- சொல்லாடல், கரு, கதைப் பொருள்.
- சொல்லாடல் நாடக எழுத்துருவிற்கு உருவம் கொடுப்பதால் மிகவும் முக்கியமானதாகவுள்ளது.
- சொல்லாடல் முலமாக நாடகக் கதையோட்டம் வளர்த்துச் செல்லப்படும்.
- சொல்லாடல் ஊடாகவும் பாத்திரம் ஊடாகவும் கதைப் பொருள் வெளிப்படுத்தப்படும்.

**செயற்பாடுகள்:-**

- *கிடைக்கக் கூடிய எழுத்துரு ஒன்றை வாசியுங்கள்.*
- *அந்த எழுத்துருவில் - கதை, பாத்திரங்கள், மோதுகை, காட்சியமைப்புக் குறிப்புக்கள், நடிகரின் அசைவுகள் போன்ற விடயங்களை பட்டியலிடுங்கள்.*
- *விழுமியக் கருத்தினை வெளிப்படுத்துகின்ற சிறுவர் கதைகளை வாசியுங்கள்.*
- *அக் கதைகளைப் போன்று புதிய கதைகளை உருவாக்கிப் பிறருக்கு கூறுங்கள்.*
- *கதைகளில் தொனிக்கின்ற விழுமியக் கருத்துக்களை இனங்காணுங்கள்.*

**வினாக்கள்:-**

- *நாடக எழுத்துரு என்றால் என்ன?*
- *எழுத்துருவின் பௌதிகப் பண்புகள் எவை?*
- *நாடக எழுத்துருவிற்கும் ஏனைய இலக்கியங்களிற்குமிடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு எழுதுக.*

## எழுத்துரு எழுதும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்.

- மேற்குறித்த விழுமியம் சார்ந்த கதைகளை நாடக எழுத்துருவாக எழுதலாம்.
- கதையில் 'விழுமியம் சார்ந்த' விடயம் முதன்மை பெற வேண்டும்.
- கதைப்பின்னலைத் தீர்மானித்துக் கொண்டு பாத்திரங்களை உருவாக்க வேண்டும்.
- சிறு சிறு காட்சிகளாகப் பிரித்து அதற்குரிய தொனியைத் தீர்மானிக்க வேண்டும்.
- அதற்கேற்ப உரையாடல்களையும், மேடைக்குறிப்புக்களையும் எழுத வேண்டும்.

## செம்மையாக்கப்பட்ட எழுத்துரு ஒன்றில் காணப்படக்கூடிய விடயங்கள்.

- கதையில் நம்பகத்தன்மை, சமூகப் பொருத்தப்பாடு காணப்படும்.
- பாத்திரங்கள், அவற்றினைப் படைத்த முறைமை சிறப்பாக இருக்கும்.
- நாடக மோடி/ பாணி, சரியான முறையில் அமைக்கப்பட்டிருக்கும்.
- மொழி நடை, கலைத்துவப் பெறுமானம், தர்க்க ரீதியானதாகவும் பார்ப்போரைக் கவரவல்ல கட்டமைப்பு என்பன காணப்படும்.
- மேடையேற்றத்திற்குச் சாத்தியமான செயல்கள் காணப்படும்.
- முரண் - நாடகத்தை வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்கெடுக்கும்.

## அரங்க விளையாட்டுக்கள்

- நடிகரின் திறன்களை விருத்தி செய்வதேடு உடல், குரல், உளப் பயிற்சியாக அமைந்து, நடிப்பதற்குத் தயார் செய்ய உதவக் கூடிய விளையாட்டுக்களை அரங்க விளையாட்டுக்களாகக் கருதலாம்.
- இவ் விளையாட்டுக்கள் அரங்கிற்கே உரிய மகிழ்வைத் தருவன.
- அரங்க விளையாட்டுக்கள் விளையாடுவதன் மூலம் ஏற்படும் திறன்கள்.
  - கற்பனைத்திறன்.
  - மனதை ஒரு நிலைப்படுத்தல்.
  - ஞாபகம் அல்லது மனனம்.
  - தலைமைத்துவம்.
  - தொடர்பாடல்.
  - கணப்பொழுதில் தீர்மானம் எடுக்கும் திறன்.

- அரங்க விளையாட்டுக்களின் மூலம் பல்வேறு திறன்கள் வளர்க்கப்படுகிறதெனினும் ‘நினைவாற்றல்’ வளர்க்கப்படுகின்ற அரங்க விளையாட்டுக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.
- நாடகச் சொல்லாடல்களை மனனம் செய்வதற்கும் அவற்றை உரிய வேளையில் கொணர்வதற்கும், நினைவாற்றல் அவசியமாகும்.
- ஞாபகப்பயிற்சி மூலம் நினைவாற்றலை வளர்த்துக் கொள்ளளாம்.

**செயற்பாடு:-**

*ஆசிரியரால் பயிற்றுவிக்கப்பட்ட நினைவாற்றலை விருத்தி செய்வதற்கான அரங்க விளையாட்டுக்களைப் பாதுகாப்பான சூழலில் விளையாடுக. (குழுவில் உள்ளவர்களின் பெயரை அல்லது ஊர்களின் பெயரை அல்லது விருப்பமான உணவின் பெயரை ஒருவர் கூற அடுத்தவர் முன்னையவர் கூறியதையும் தன்னுடையதையும் கூறுதல்…. எனச் சங்கிலிக் கோர்வையாக கூறி விளையாடுக.)*

## அரங்கப் பயிற்சிகள்

**உடலை முனைப்புறுத்தும் பயிற்சிகள்**

- நடிகனிற்கு உடலை லாவகமாக வைத்திருப்பதற்குப் பயிற்சிகள் தேவைப்படுகின்றன.
- லயப்பிடிப்பான அசைவும் நெகிழ்ச்சியான இயக்கமும் அவசியமானது.
- எனவே லயத்தோடு கூடிய நடை, ஆடல், உடல் நெழிவுகள், அங்கங்களை அசைத்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்து பார்க்கவும். *(நல்ல இசையை இரசித்தவாறு ஏனையோரிற்கு இடையூறின்றி இச் செயற்பாட்டில் ஈடுபடுக.)*

### உடற் தளர்வு

- நல்ல இசையைக் கேட்டவாறு உடல் உறுப்புக்களைப் பகுதி பகுதியாகத் தளர்வுறச் செய்க. உடல் உள இணைப்பின் மூலம் தளர்நிலை அசைவுகளை மேற்கொள்ள முடியும்.
- இந் நிலையிலேயே மிருகங்கள், பறவைகள், மரங்கள், வாகனங்கள் போன்ற உருவங்களையும் அவற்றின் அசைவுகளையும் உருவாக்க முடியும்.
- மேற்குறித்த அசைவுகளில் பாத்திரத்தின் பௌதீகத் தோற்றத்தை வெளிப்படுத்துகின்ற உடல் உறுப்புக்களின் ஒத்ததிசைவான அசைவினை **உடல் அசைவு** எனக் கொள்ளலாம்.
- உடலசைவின் போது வேறுபட்ட அனுபவங்களைப் பெற முடியும்.
- உள்ளார்ந்தமான உணர்வைப் பெற்றுப் பாத்திர வெளிப்பாட்டைச் செய்ய முடியும். உரிய ஒலிக் குறிப்புக்களை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.
- நடிகன் ஏற்கின்ற பாத்திரத்தின் குணப் பண்புகளை அல்லது இயல்புகளை உணர்ந்து கொள்ள முடியும்.

## மொழியல்லா மொழி

உலகில் பயன்பாட்டில் உள்ள எந்தவொரு மொழியையும் பயன்படுத்தாது தாமாகவே உருவாக்குகின்ற ஒலிக் குறிப்புக்கள், சத்தங்கள், சொற்கள்.. போன்றவற்றைப் பயன்படுத்திப் புதிய வகையில் உருவாக்கப்படும் மொழியாக இருக்கும்.

**மொழியல்லா மொழியைப் பயன்படுத்துவதன் பயன்கள்:-**

- உணர்வுகளைப் பரிமாறிக் கொள்ளலாம்.
- முகபாவங்கள். வெளிப்பாடுகளை வெளிக்காட்டத் தடைகள் இருக்காது.
- வேறுபட்ட தொனியிலான குரற்பயன்பாடும் ஏற்ற இறக்கம், புறத்தெறிகை, கதி, சுருதி என்பனவற்றைப் பயிற்சி பெற முடியும்.
- உரையாடல் முறைகள், பாடல் மெட்டுக்கள் உருவாக்கம், விசேட விளைவுடைய ஒலிகள் உருவாக்கம் என்பவற்றிற்கு உதவும்.
- உரையாடுதல், பாடுதலில் ஏற்படும் தடைகளை அகற்ற இப் பயிற்சி உதவும்.
  மொழியல்லா மொழி மூலமாக இன்னொருவருடன் உரையாடிப் பயிற்சி பெறுக. பாடல்கள் பாடிப் பயிற்சி பெறுக.

## நாடகங்களும் விழுமியப் பண்புகளும்

- வாழ்க்கையில் நல்லொழுக்கங்களாகப் பின்பற்றப்படுகின்ற நடத்தைகள் விழுமியப் பண்புகளாகக் கருதப்படுகின்றன.
- இவ் விடயங்களை முனைப்புறுத்துகின்ற நாடகங்களை **'விழுமியப் பண்புடைய நாடகங்கள்'** எனக் கூறலாம்.
- பெரும்பாலும் பாடசாலை நாடகங்கள் இப்பண்புடைய நாடகங்களாகக் காணப்படும்.
- பாடசாலை மாணவர்களை மையமாகக் கொண்டு நிகழ்த்தப்படுபவை **'பாடசாலை அரங்கு'** எனப்படும்.
- பாடசாலை அரங்குகள் - ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு, உயர்தரப் பிரிவு மாணவர்களை மையப்படுத்தியிருக்கும்.
- 1980 களில் காணப்பட்ட வெளியிடங்களில் நாடகங்கள் மேடையேற முடியாத நிலைமை பாடசாலை அரங்கைத் தோற்றுவித்தது எனலாம்.
- இவை மாணவர்கள் சார்பான பிரச்சினைகளை மையப்படுத்திய நாடகங்களாக விளங்குகின்றன.
- பாடசாலை மாணவர்களுடன் கலந்துரையாடி எழுதப்பட்ட நாடகங்களும் உள்ளன.
- எனவே அந்த நாடகங்களில் - பெற்றோர் பிள்ளைகளிற்கிடையிலான புரிந்துணர்வு, பெண் கல்வி, பால்நிலை சமத்துவம், மாணவர் ஒழுக்கம், கல்விப் பிரச்சினைகள், சுய சிந்தனைக் கட்டுப்பாடுகள் என்பன பேசுபொருளாக இருக்கின்றன.

- இவற்றுள் விழுமியக் கருத்துக்கள் மேலோங்கியிருக்கும் - மூத்தோருக்கு மதிப்பளித்தல், விருந்தோம்பல், பிறர் கருத்துக்களிற்கு மதிப்பளித்தல், உண்மை பேசுதல், தர்மம், நன்றி மறவாமை போன்ற கருத்துக்கள் மேலேழுந்திருக்கும்.

  *(உதாரணம்:- நாடகங்கள் - புளுவாய் மரமாகி, ஆரொடு நோகேன், நேயத்தே நின்ற நிமலம்…)*

**செயற்பாடு:-** *சிறுவர் நாடகம், பாடசாலை நாடக எழுத்துருக்களை வாசித்துப் பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.*

| நாடக எழுத்துரு | நாடகாசிரியர் | கல்விசார் பண்புகள் | எடுத்துக்காட்டு (உதாரணம்) | விழுமியப் பண்புகள் | எடுத்துக்காட்டு (உதாரணம்) |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

## அரசனின் புத்தாடை

## நாடக எழுத்துருவை வாசித்தல், நயத்தல்.

- இந்த நாடகம் மாவை. நித்தியானந்தன் என்பவரால் எழுதப்பட்டது.
- The Emperor’s New Clothes என்ற சிறிய கதையை அடிப்படையாகக் கொண்டு 2003 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது.
- இவருடைய ஏனைய நாடகங்களில் ( ஐயா எலக்சன் கேட்கிறார், இனிச் சரிவராது, கண்டம் மாறியவர்கள்) காணப்படுகின்ற கேலியும் கிண்டலும் இந்த நாடகத்திலும் காணப்படுகின்றன.
- இதில் அங்கதச் சுவையுடன் மிகவும் காத்திரமான விடயப் பொருள் பேசப்படுகிறது.
- எனவே வாசிக்கும் போது நடிக்கும் போது வினோத, விகட, அங்கத உணர்வுகள் உரியவாறு வெளிப்படுத்தப்பட வேண்டும்.

### நாடகத்தின் கதைப் பொருள்

- அரசனது பேரவாவும் அரசனிடம் ஏனையோரிடமும் சிக்கிக் கொண்ட மந்திரி, தளபதி ஆகியோர் செய்யும் உண்மை மறைப்புத் தன்மையும் இரண்டு புத்திசாலி ஏமாற்றுக்காரர்கள் செய்யும் செயற்பாடுகளும் அவற்றினால் ஏற்படும் விளைவைப் பார்ப்போர் கண்டு இரசிப்பதும் இந்நாடகத்தின் கதைப் பொருளாகும்.

### நாடகத்தின் கரு

- தன்னிலை மறந்து தலைக்கனம் கொள்பவர் இறுதியில் சிறுமையையே சந்திப்பார்.

**நாடகப் பாத்திரங்கள்**

- **அரசன்** - தற் பெருமையும் பேரவாவும் உடையவர்.
  தானே ஏனையோரை விடச் சிறந்தவனாக இருக்க வேண்டுமென நினைப்பவர்.
  தனது இயலாமையை வெளிக்காட்டாது ஏமாறுபவர்.
- **மந்திரி, தளபதி** – தம்மை மூடர்கள் என ஏற்றுக்கொள்ளாது மூளைசாலிகள் எனக் காட்டிக்கொள்வார்கள். இதனால் மகிழ்நெறிப் பாத்திரங்கள் போலத் தோற்றமளிப்பார்கள்.
- **ஏமாற்றுக்காரர்கள்** - உண்மைத் தன்மை இல்லாதவர்களை ஏமாற்ற முடியும் என்ற எண்ணம் கொண்ட புத்திசாலிகள்.
- **குழந்தைகள்** - உண்மையானவர்கள், பயமறியாதவர்கள்.
- **கதை சொல்வோர்** - நாடகக் கதையைத் தொடக்கி வைப்பவர்கள், நகர்த்திச் செல்பவர்கள், பாடகர்கள்.
- **பொது மக்கள்** - நாடக இறுதிக் கட்டத்தில் வருபவர்கள்.

**செயற்பாடு** - *இந்த நாடகத்தின் கரு, பாத்திரங்கள், மோதுகை, களங்கள், வேடவுடைகள், காட்சிகள் என்பன தொடர்பான விடயங்களைப் பட்டியலிட்டுக் கொள்வதோடு, நாடகப் பாத்திரங்களை நடித்துப் பயிற்சிபெறுங்கள்.*

*(சட்டியும் குட்டியும், நாய்க்குட்டி ஊர்வலம் என்பனவும் மாவை நித்தியானந்தனின் நாடகங்களாகும்.)*

---

## இரண்டாம் தவணை

## நாடகமும் வாழ்க்கையும்

- நாடகத்திற்கும் அன்றாட வாழ்வின் செயற்பாடுகளிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு.
- நாடகப் பாத்திரங்கள் குறித்ததொரு நிலையில் வெளிப்படுத்துகின்ற உணர்ச்சிகளிற்கும் யதார்த்த வாழ்வில் அதையொத்த மனிதர்கள் வெளிப்படுத்துகின்ற உணர்ச்சிகளிற்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன.
- நாம் கற்கின்ற நாடகங்களில் இவ்வாறு நடைமுறை வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடைய பாத்திரங்களை இனங்காணலாம்.
- எனவே இவ்வாறான உணர்ச்சிகள், குணங்கள், பண்புகள், செயலியக்கங்கள் என்பவற்றை விளங்கிக் கொண்டு வாழ்வில் நல்ல மனித உறவை வளர்த்துக் கொள்ள முடியும்.
- அதாவது, வாழ்கையைப் புரிந்துகொள்ள நாடகம் துணைசெய்கிறது.
- நாடகம் மனித மோதுகையின் வெளிப்பாடாகும்.
- நடைமுறை வாழ்வின் ஏக்கங்கள், துன்பங்கள், மகிழ்ச்சிப்பெருக்குகள் போன்ற பல்வேறு விடயங்களை நாடகம் பிரதிபலிக்கிறது.

**செயற்பாடு :-** *கிடைக்கக் கூடிய சிறுவர் நாடக எழுத்துருவொன்றை வாசியுங்கள்.*

- *அந்த நாடகத்தில் உள்ள நடைமுறை வாழ்வுடன் ஒத்த விடயங்களைப் பட்டியலிடுங்கள்.*
- *அப் பாத்திரங்கள், சம்பவங்களை இனங்கண்டு குறித்த உணர்வுடன் நடித்துப் பயிற்சி பெறுக.*

*(வாசிக்கக் கூடிய சிறுவர் நாடகங்கள் - நாய்க் குட்டி ஊர்வலம், சட்டியும் குட்டியும், பஞ்சவர்ண நரியார், கண்டறியாத கதை, தப்பி வந்த தாடி ஆடு, வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள், அமைதிப் பூங்கா, ஆச்சி அச்சாப் பாட்டி, பெரியோர் சொற் கேட்போம், பிள்ளை அழுத கண்ணீர்.)*

## பாத்திரங்களைச் சித்திரித்தல்

- வாழ்வில் உள்ளதைப் போன்றே பாத்திரங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு இயல்புகளைக் கொண்டிருக்கும்.
- எனவே வாழ்வில் ஒரு நடிகனுக்கு நேர்ந்த அனுபவங்கள், சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகளில் அந் நடிகனின் மனவெழுச்சிகள் - கோபதாபம், விருப்பு வெறுப்பு, துயரம், மகிழ்ச்சி, சலிப்பு முதலான தன்மைகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களை அறிந்துகொள்ளுதல் அவசியமாகும்.
- இவ்விடயத்தைச் சித்திரித்துக் காட்டுதல் மூலம் சிறந்த பாத்திரத் தெரிவை மேற்கொள்ள முடியும்.
- சிறுவர் நாடகங்களில் பாத்திரச் சித்திரிப்பை மேற்கொள்ளும் போது மனிதப் பாத்திரங் களையோ, பிராணிப் பாத்திரங்களையோ அதிமானிடப் பாத்திரங்களையோ ஏற்க வேண்டி வரும்.
- எனவே அன்றாட வாழ்வில் இப்பாத்திரங்களை நன்கு அவதானிக்க வேண்டும்.
- எழுத்துருவொன்றை நாடகமாக்கும் போது நடிகனே முக்கியம் பெறுகின்றான்.

**செயற்பாடு :-** *திருமண நிகழ்வு, மரண வீட்டு நிகழ்வுகள், கோயிற் திருவிழா போன்றவற்றில் அவதானித்த சம்பவங்களைச் செய்து பயிற்சி பெறுங்கள்.*

## காட்சியமைப்பு

- நாடகமொன்றை மேடையேற்றும் போது காட்சிப் பின்னணி முக்கியமானதாகவுள்ளது.
- நாடகத்திற்குப் பொருத்தமான காட்சியமைப்பை வரைந்து பார்க்கலாம், பின்னர் ஒழுங்கமைத்து காட்சியை அமைக்கலாம்.
- வரையும் போது – காட்சிக்குரிய களம், கருத்துக்கள், மோடி, வர்ணப் பொருத்தப்பாடு, சமநிலை, தொடர்பின் முக்கியத்துவம் என்பவற்றைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.
- நாடக மனநிலைக்கும் காட்சிக்கும் இடையேயான தொடர்பும், பண்பாட்டுக்கும் காட்சிக்கும் இடையிலான தொடர்பும் கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.

**செயற்பாடு :-** *வாசித்த சிறுவர் நாடகமொன்றிற்கான காட்சியமைப்பை பொருத்தமாக வரையுங்கள்.*

## இசைக் கருவி :-

- நாடகம் ஒன்றை மேடையேற்றும் போது இசை முக்கியம் பெறுகின்றது.
- இசை பயன்படுத்துவதன் மூலம் நாடகத்தில் லயப்பாங்கான அசைவுகள் நடனங்களை உருவாக்க முடியும்.
- சிறுவர் நாடகங்களிற்குப் புத்தாக்க இசையைப் பயன்படுத்த முடியும்.

**செயற்பாடு :-** *அயலில் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டு இசைக் கருவியொன்றை தயார்செய்து இசையெழுப்பி மகிழுங்கள்.*

## வேட உடை :-

- பாத்திரச் சித்திரிப்பைச் சிறப்பாக வெளிப்படுத்திக் காட்ட வேட உடை பயன்படுகிறது.
- பாத்திரத்தின் குணப்பண்புகளை வெளிக்காட்டுவதோடு தொழில், அந்தஸ்த்து, பால், பண்பாடு போன்றவற்றை இனங்காட்ட வேட உடை பயன்படுகிறது.
- எனவே நாடகம் ஒன்றைத் தயாரிக்க முனையும் போது பாத்திரங்களிற்குரிய வேட உடை மாதிரிகளைத் தயார் செய்வது பொருத்தமாக இருக்கும்.
- அதற்காக – பாத்திரத்திற்கும் வேட உடைக்குமான தொடர்பு, வேட உடை வடிவத்திற்கும் பாத்திரத்திற்குமான பொருத்தப்பாடு, நாடக மோடிக்கான வேட உடையின் பொருத்தப்பாடு, வேட உடையின் இழைமானம், வர்ணப் பொருத்தப்பாடு, பண்பாட்டின் பொருத்தப்பாடு போன்ற விடயங்களைக் கருத்திலெடுத்து வேட உடை மாதிரிகளைத் தயாரிக்க வேண்டும்.

**செயற்பாடு :-** *மேற்குறித்த விடயங்களைக் கருத்திற் கொண்டு காகிதங்கள், வெட்டுத்துணிகள், கழிவுப் பொருட்கள் மூலமாக நீங்கள் வாசித்த நாடகத்தின் பாத்திரத்திற்கான வேட உடை மாதிரி ஒன்றைத் தயாரித்துப்பாருங்கள்.*

## ஒப்பனை

- நாடகப் பாத்திரத்தைத் திறம்பட வெளிப்படுத்தப் பாத்திரத்திற்கான ஒப்பனை முக்கியமானது.
- நாடக மோடிக்கு ஏற்ப ஒப்பனை அமைதல் வேண்டும்.
- பாத்திரப் பண்புகள், உணர்வுகள் என்பவற்றைக் கருத்திலெடுக்க வேண்டும்.
- உணர்வை வெளிப்படுத்தப் பொருத்தமான வர்ணம் பயன்படுத்த வேண்டும்.

**செயற்பாடு :-** *நீங்கள் வாசித்த அல்லது எழுதிய நாடகப் பாத்திரத்திரத்திற்கு ஒப்பனைக் குரிய மாதிரி ஒன்றை வரைந்து வர்ணம் தீட்டுங்கள்.*

## நாடகச் சொல்லாடல்

- ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களிற்கிடையில் நடைபெறும் சொல் சார்ந்த நாடகப் பாங்கான தொடர்பாடலே சொல்லாடல் ஆகும்.
- சொல்லாடல்கள் நாடகச் செய்கைக்கான விளக்கமாகவும் அழுத்தம் தருவதாகவும் அமையும்.

- சொல்லாடல்கள் உரிய பாத்திரங்கள் மூலமாக வெளிப்பட்டு அவற்றின் இயல்புகளை வெளிக் காட்டுகின்றன. இதற்க்குப் பேச்சு நுட்பங்கள் பயன்படுகின்றன.
- பாத்திரத்தின் உணர்வும் அசைவும், தொடர்புறும் பாத்திரத்தின் உறவு நிலையும் சொல்லாடலின் தொனி, வீச்சு போன்றவற்றைத் தீர்மானிக்கும்.
- சொல்லாடல் நுட்பங்களில் நடிகர்கள் தேர்ந்த பயிற்சி பெறவேண்டும்.

**செயற்பாடு :-**

*நீங்கள் விரும்பும் பாத்திரம் அல்லது எழுத்துருப் பாத்திரத்தின் சொல்லாடல் பகுதியை வேறு வேறு உணர்வு வெளிப்பாட்டுடன் இயல்புகள் வெளிப்படுமாறு உரையாடிப் பயிற்சி பெறுங்கள்.*

## நாடகப் பாடல்கள்

- பாரம்பரிய நாடகங்கள், சிறுவர் நாடகங்கள், நவீன நாடகங்கள் அனைத்திலும் பெரும்பாலும் பாடல்கள் காணப்படுகின்றன.
- நாடகப் பாடல்களைப் பாடும்போது சுருதி, தாளம், பாவம், மெட்டுகள் பிறழ்வு ஏற்படாதவாறு பாட வேண்டும்.
- பாடல்கள் எழுகின்ற சந்தர்ப்பங்களிற்கு ஏற்ப பாடல்களின் கருத்துக்கள், உணர்வுகள் சந்தங்கள் வேறுபடும்.
- பாரம்பரிய நாடகங்கள் பாடல்கள் மூலமாக உரையாடும் பண்புகள் கொண்டவை.
- நவீன நாடகங்களில் சம்பவத்தை சித்திரிக்கவும் காட்சிப் படிமங்களைக் கண்முன் நிறுத்தவும் பெருங்காட்சிப் பண்புகளை வெளிப்படுத்தவும் பாடல்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- நவீன நாடகங்கள், சிறுவர் நாடகங்களில் நாட்டார் பாடல்கள், சிறுவர் பாடல்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- சிறுவர் நாடகப் பாடல்கள், ஆடல், விளையாடல்களைக் கொண்டிருக்கும்.
- அவை எளிமையான மெட்டுக்கள், எளிமையான மொழிநடையைக் கொண்டிருப்பதோடு சிறுவர்களின் இயல்புகளை வெளிக்காட்ட உதவும்,
- ஒவ்வொரு நாடகப் பாடல்களிற்கும் அவை பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பம் முக்கியமானதாகும்.
- நாடக அசைவுகளைச் சீரான லயத்தில் நிகழ்த்தவும் ஆற்றுகையில் கனதியை ஏற்படுத்தவும் பாடல்கள் உதவுகின்றன.

**செயற்பாடு :-** *பின்வரும் நவீன நாடகப் பாடல்கள், சிறுவர் நாடகப் பாடல்களை தேடிப்பெற்று மெட்டுக்கள் அமைத்துப் பாடிப் பயிற்சி பெறுங்கள்.*

- *ஆக்காண்டி ஆக்காண்டி எங்கெங்கே முட்டை வைத்தாய்…( தீ சுமந்தோர், ஆர்கொலோ சதுரர், ஆன்ம தகனம்)*
- *ஆலையிலே சோலையிலே…(மாதெரு பாகம்)*

- *பாறையிலே கிணறு வெட்டி…(தாயுமாய் நாயுமாய்)*
- *அம்புலிமாமா அழகான சொக்கா….(பாலக்குப் பாலகன்)*
- *நரி மகாராசாவின் வீட்டைபார்… (ஒற்றுமையின் சின்னம்)*
- *ஆடுகள் நாங்கள்..( தப்பி வந்த தாடி ஆடு)*
- *எல்லோரும் சற்றிங்கு கவனியுங்கோ…(புழுவாய் மரமாகி)*
- *புத்தி கெட்ட மொக்கர் என்று…(புளுவாய் மரமாகி)*
- *தாய் மடி அல்லவோ தரணியின் தொட்டிலாம்..(ஆரொடு நோகேன்)*

**பாடசாலை அரங்கு**

- 1980 களின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை பாடசாலை அரங்கு என்ற அரங்கப் போக்கு உருவாக வழிவகுத்தது எனலாம்.
- பாடசாலை நாடகங்கள் பாசாலைச் சமூகத்தை மையப்படுத்தி ஆற்றுகை செய்யப்படுகின்றன.
- இவற்றின் நாடகக் கருப்பொருட்கள் கல்வி, மாணவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பெற்றோரின் கருத்து நிலைகள் போன்றதாக இருந்துள்ளன.
- இவ்வகை நாடகங்கள் 1979 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர் தர வகுப்பில் நாடகமும் அரங்கியலும் பாடத்துறையாக அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் புதிய பரிமாணம் பெற்றது எனலாம்.
- ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு, உயர் தரப் பிரிவு என வேறுபட்ட கதைப் பொருட்களை உள்ளடக்கியதாக பாடசாலை நாடகங்கள் படைக்கப்பட்டன.
- இந்த நாடகங்கள் பரிசளிப்பு விழாக்கள், மாணவர் மன்றச் செயற்பாடுகள், இல்ல மெய்வல்லுனர்ப் போட்டிகள், தமிழ்த் தின, ஆங்கில தினப் போட்டிகள், விடுதி தினம், சாரணர் பாசறை போன்ற நிகழ்வுகளில் மேடையேற்றப்பட்டன.
- பாடசாலை நாடகங்கள் கற்றல் ஊடகமாகவும் கல்விப்புலம் சார்ந்த பிரச்சினைகளை வெளிப்படுத்தும் ஊடகமாகவும் பரிணமித்த காரணத்தால் அது **கல்விசார் அரங்காகவும்** நோக்கப்படுகின்றது.
- பாடசாலை அரங்குடன் தொடர்புபட்டவர்கள்:- கதிரேசபிள்ளை மாஸ்டர், மயிலங்கூடலூர் நடராசன், கலையரசு சொர்ணலிங்கம், சொக்கன், நா. சுந்தரலிங்கம், சி. மௌனகுரு, திருமதி. கோகிலா மகேந்திரன், ஏ.ரி. பொன்னுத்துரை, குழந்தை.ம. சண்முகலிங்கம், பிரான்சிஸ் ஜெனம், அ.தாசீசியஸ், க. சிதம்பரநாதன், வி.எம். குகராஜா, சி. ஜெயசங்கர், இளைய பத்மநாதன் மற்றும் பலர்.
- பல பிரபல பாடசாலைகளும் பாடசாலை அரங்க முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

## ஈழத்தில் சிறுவர் அரங்க வளர்ச்சி

- சிறுவர் அரங்கு சிறுவர்களைப் பார்வையாளர்களாகக் கொண்டு அவர்களிற்குரிய கருப் பொருளை, கதையம்சத்தைக் கொண்ட நாடகங்களாக உள்ளன.
- இந்த நாடகங்களைப் பெற்றோர்கள், ஆசிரியர்களும் பார்வையிடுவார்கள்.
- சிறுவர் நாடகங்களில் சிறுவர்கள், பெரியவர்கள், சிறுவர்களும் பெரியவர்களும் இணைந்தும் நடிப்பார்கள்.
- சிறுவர் நாடகங்கள் மனிதர்கள், பிராணிகள், அதிமானுடர்கள், சடப்பொருட்கள் என பல பாத்திரங்களைக் கொண்டு எழுதலாம்.
- சிறுவர் நாடகங்கள் பெரும்பாலும் பாடசாலைகளிலும் நிறுவனங்களிலும் மேடையேற்றப்பட்டன.
- குழந்தை. ம. சண்முகலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட **கூடி விளையாடு பாப்பா** என்ற சிறுவர் நாடகமே சிறுவர் அரங்கிற்கான எண்ணக்கருவை சிறப்பாகக் கொண்ட நாடகமாகக் கருதப்படுகிறது.
- சிறுவர் அரங்குடன் தொடர்புடைய ஆளுமைகள் சிலர்:-- குழந்தை. ம. சண்முகலிங்கம், பேரா. சி. மௌனகுரு, கலாநிதி.இ. ஜெயசங்சர், கலாநிதி. க. சிதம்பரநாதன், கந்கவனம், திருமதி. கோகிலா மகேந்திரன், ஏ.ரீ. பொன்னுத்துரை, தாசீசியஸ், போன்றோரைக் குறிப்பிடலாம்.

## கல்வி அரங்க ஆளுமைகள்

### கவிஞர் வி. கந்தவனம் :-

நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சிறுவயது முதல் நாடக ஈடுபாடு கொண்டிருந்தார். ஆசிரியராக இருந்த இவர் 1974, 75 காலப் பகுதிகளில் கொழும்புப் பல்கலைக் கழகம் நடத்திய நாடக டிப்ளோமா பயிற்சி நெறியில் பயின்றார். இப் பயிற்சியின் போது **பூனைகளின் இராச்சியம்** என்ற சிறுவர் நாடகத்தைத் தயாரித்துள்ளார். மேலும் **புத்திமான் பலவான், பரீட்சை நடைபெறுகிறது, அசோகவனம்** ஆகிய நாடகங்களையும் எழுதியுள்ளார். 1977 இல் ‘சிறுவர் நாடகம்’ என்ற தொடர் கட்டுரையை தினகரன் இதழில் எழுதியுள்ளார். யா/வசாவிளான் மத்திய கல்லூரியில் ஆசிரியராக இருந்த போது நாடகமும் அரங்கியலும் பாடத்தை முதன்முதலாக அறிமுகம் செய்தார். இவரது நாடகங்களில் இலக்கியத் தொடர்புகள், செம்மையான மொழிக் கையாட்சி, பாடல்கள் என்பன காணப்பட்டன.

### குழந்தை.ம. சண்முகலிங்கம் :-

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நாடக அரங்கக் கல்லூரியை உருவாக்கி நாடகத்திற்கு வரன்முறையான பயிற்சிகளை உருவாக்கியவர். சிறுவர் அரங்கு, பாடசாலை அரங்கு, நவீன அரங்கு எனப் பல்வகை அரங்கப் புலமையுடையவர். நூற்றுக் கணக்கான நாடகங்களை எழுதியுள்ளதோடு நாடகங்களை மொழிபெயர்ப்பும் செய்துள்ளார். இவர் ஒரு சிறந்த நெறியாளரும் ஆவார். இவரது நாடகங்களின் பண்புகளாகப் பின்வரும் விடயங்களைக் குறிப்பிடலாம் :-

- நகையுணர்வுடன் கதை சொல்லும் பாங்கு

- சிறுவரைக் கவரும் கதைப்போக்கு.
- அனைவரையும் கவரும் மொழியாட்சி.
- உரைஞர், பாடுநர் போன்ற பாத்திரத் தொகுதி மூலமாக கதையை நகர்த்துதல்.
- சிந்தனைக்குரிய செய்தி வெளிப்பாடு.
- மாணவர்களின் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தும் கதையம்சம். இவரது **சிறுவர் நாடகங்கள் சில :-** கூடிவிளையாடு பாப்பா, ஒற்றுமையின் சின்னம், பஞ்சவர்ண நரியார், கண்டறியாத கதை, பாலுக்குப் பாலகன், முயலார் முயல்கிறார்…

  **பாடசாலை நாடகங்கள் சில :-** புழுவாகி மரமாகி, தாயுமாய் நாயுமானார், எங்கள் தவப்பயன், ஆரோடு நோகேன், வாற்பேத்தைகள்.

**பேராசிரியர் சி. மௌனகுரு :-**

கூத்துக்கள், பாடசாலை நாடகங்களில் கைதேர்ந்தவர். பேரா. சு. வித்தியானந்தனின் கூத்துப் புத்தாக்க முயற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டவர். கூத்து வடிவங்களிற்குள் புதிய கருத்துக்களை உள்ளடக்கி தயாரிப்புக்களை மேற்கொள்கின்றவர் (**சங்காரம்** என்ற நாடகம்). 1980 களில் சிறுவர் நாடகங்களைத் தயாரித்தவர். (**தப்பி வந்த தாடி ஆடு, வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள்**). இவரது சிறுவர் நாடகங்களிலும் மரபுவழிக் கூத்துக்களின் சாயல் காணப்படும். **சக்தி பிறக்குது, மழை, சரிபாதி** போன்ற பாடசாலை நாடகங்களையும் எழுதி நெறியாள்கை செய்துள்ளார். இந்த நாடகங்கள் மோடியுற்ற நாடகங்களாகவும் குறியீட்டுப் பண்பு கொண்டவையாகவும் மரபுவழிக் கூத்துக்களின் ஆடல், பாடல், எடுத்துரைப்பு பண்புகளைக் கொண்டுள்ளன.

**கலாநிதி. க. சிதம்பரநாதன் :-**

நாடக அரங்கக் கல்லூரி ஊடாக அரங்கத்துறைக்கு அறிமுகமானவர். சண்முகலிங்கம் அவர்களின் நாடகங்களை நெறியாள்கை செய்தவர். மாணவர்களிற்கான நாடகப் பட்டறைகளை நடாத்தி நாடகங்களைத் தயாரித்தவர். பிரயோக அரங்க முறை, பட்டறை அரங்கு என்பவற்றில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகிறார், அரங்க செயற்பாட்டுக் குழு (TAG) என்ற அரங்க நிறுவனத்தினூடாக செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார். இவர் நெறியாள்கை செய்த **சிறுவர் நாடகங்கள்** - *கூடிவிளையாடு பாப்பா, முயலார் முயல்கிறார், ஆச்சி சுட்ட வடை, தாய் சொல்லைத் தட்டாதே.* **பாடசாலை நாடகங்கள்** - *சத்திய சோதனை, எங்கள் தவப்பயன், புழுவாய் மரமாகி, தாயுமாய் நாயுமானார், வாற்பேத்தைகள்.*

**கலாநிதி. சி. ஜெயசங்கர் :-** நாடக அரங்கக் கல்லூரியின் மூலமாக செப்பனிடப்பட்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தை சிறப்புப் பாடநெறியாக முதன் முதலில் கற்றவர். பல சிறுவர் நாடகங்களையும் பாடசாலை நாடகங்களையும் எழுதித் தயாரித்துள்ளார். (**பிள்ளை அழுத கண்ணீர், நவீன பத்மாசுரன்**). கூத்துக் கலையிலும் கைதேர்ந்தவர். தற்போது விபுலானந்தா அழகியற் கல்லூரியின் பணிப்பாளராகக் கடமையாற்றுகின்றார்.

ஆசிரியர்களாக இருந்த பலர் பாடசாலை நாடகங்களிலும் சிறுவர் நாடகங்களிலும் ஈடுபாடு கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் - ஏ.ரீ.பொன்னுத்துரை, அ. பிரான்சிஸ் ஜெனம், நவாலியூர். செல்லத்துரை, மாவை. நித்தியானந்தன், திருமதி. கோகிலா மகேந்திரன், க.திலகநாதன், க.இ.கமலநாதன், தே.தேவானந், யோன்சன் ராஜ்குமார், செ.செல்வக்குமார்….

---

**மூன்றாம் தவணை**

**நால்வகைச் சித்திரிப்பு**

- நடிகன் பாத்திரச் சித்திரிப்பை மேற்கொள்ளும் போது உடல், குரல், உணர்வு, காண்பியங்கள் மூலமாக வெளிப்பாடுகளை மேற்கொள்வார்கள்.
- உடல்வழிச் சித்திரிப்பு – நடிகன் தன் உடல் மூலமாக பாத்திர வெளிப்பாட்டை மேற்கொள்ளல் ஆகும்.
- குரல்வழிச் சித்திரிப்பு – நடிகன் தன் குரல் மூலமாக, சொல்லாடல்கள் மூலமாக பாத்திரச் சித்திரிப்பை மேற்கொள்ளல் ஆகும்.
- உணர்ச்சிவழிச் சித்திரிப்பு – நடிகன் உணர்வுகளை உரியவாறு வெளிப்படுத்தி நடித்தலாகும்.
- காண்பியவழிச் சித்திரிப்பு – நடிகன் வேட உடை, ஒப்பனை, அணிகலன்கள், கைப்பொருட்கள், மேடைப்பொருட்கள் மூலமாகச் சித்திரித்தல் ஆகும்.
- சில எழுத்துருக்களில் நால்வகைச் சித்திரிப்புக்கள் தொடர்பான குறிப்புக்கள் காணப்படும். உதாரணமாக :– வேட உடைகள் பற்றிய குறிப்புக்கள், உணரச்சிகள் பற்றிய குறிப்புக்கள் (கோபமாக…) கைப்பொருட்கள் பற்றிய குறிப்புக்கள், தட்டுமுட்டுக்கள் பற்றிய குறிப்புக்கள்…

**செயற்பாடு** *:- ''அரசனின் புத்தாடை'' என்ற நாடக எழுத்துருவை வாசித்து மேற்குறித்த நால்வகைச் சித்திரிப்புக்களை இனங்கண்டு அடிக்கோடிட்டு, அதன் அடிப்படையில் அட்டவணையைத் தயாரியுங்கள்.*

**அரங்க ஒளியூட்டல் :-**

- அரங்கில் பாரக்கக் கூடிய விடயங்களை மெருகூட்டுவதில் ஒளியூட்டல் பெரும்பங்காற்றுகின்றது.
- அதாவது காண்பிய வழிச் சித்திரிப்புக்கு உதவுகின்றது.
- நாடகக் காட்சிகளின் தாக்கவன்மை, உணர்வுகளை அழுத்திக்காட்ட ஒளியூட்டல் உதவுகின்றது.
- எனவே நாடகத்திற்கு ஒளியூட்டுவது தொடர்பான அடிப்படைகளை அறிந்துகொள்ளுதல் அவசியமாகும்.
- ஒளியூட்டல் ஒன்றை மேற்கொள்ள மின்சுற்று அவசியம்.
- அடிப்படை மின்சுற்றை அமைக்க உலர் மின்கலம், மின்குமிழ், தொடுக்கும் கம்பிகள் தேவை.
- மின்சுற்று தொடர் இணைப்பு, சமாந்தர இணைப்பு என இருவகைப்படும்.
- சமாந்தர இணைப்பின் மூலம் நீண்ட நேரம் ஒளிர்வு இடம்பெறும்.

- அலங்கார மின்குமிழ்த் தொகுதிகளில் உட்புற இணைப்பின் மூலம் ஒரு மின்குமிழ் பழுதடைந்தாலும் தொடர்ந்து ஏனையவை ஒளிர வாய்ப்புக் காணப்படுகின்றது.
- ஒரு பொருளிற்கு வெவ்வேறு விதமாக ஒளியூட்டலை மேற்கொள்ளும் போது வேறுபட்ட தோற்றப்பாடுகளை வெளிக்காட்ட முடியும்.

**செயற்பாடு :-** *வீட்டில் கிடைக்கக் கூடிய ஒளியமைக்கக் கூடிய பொருட்களைச் சேகரியுங்கள். சிறிய சிறிய விளையாட்டுப் பொருட்களைக் காட்சிப் பொருட்களாக ஒழுங்கு செய்யுங்கள். ரோச்லைற், மெழுகுதிரி, கைவிளக்கு, கைத்தொலைபேசி லைற், ஒளிபுகும் நிறத்தாள்கள்(செலபின் தாள்)… போன்றவற்றைப் பயன்படுத்தி குறித்த ஒரு பகுதியில் சிறிய பொருட்களை வைத்து ஒளியூட்டிப் பாருங்கள். ஏற்படுகின்ற வேறுபாடுகளை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.*

## நாடக செயலியக்க ஒத்திகை

- எழுத்துருவொன்றை அதன் ஆற்றுகை சார்ந்த முழுமை நிலைக்குக் கொண்டு செல்வதற்கு மேற்கெள்ளப்படும் செயற்பாட்டுப் படிமுறைகளை **நாடக ஒத்திகை** எனலாம்.
- நாடக ஒத்திகை என்பது அழகியல் நயப்பை ஏற்படுத்தும் வகையில் நாடகச் சித்திரிப்பை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் செயற்பாடாகும்.
- ஒத்திகையானது - வாசிப்பு ஒத்திகை, மனன ஒத்திகை, செயலியக்க ஒத்திகை, இணைப்பாக்கம், பாத்திரப்படைப்பு-மெருகூட்டல் ஒத்திகை, தொழில்நுட்ப ஒத்திகை, இறுதி ஒத்திகை அல்லது வெள்ளுடுப்பு ஒத்திகை எனப் பல படிநிலைகளைக் கொண்டது.
- நாடகம் மனிதனைச் செய்கை நிலையில் சித்திரிப்பதாகும். இதனால் பாத்திரங்களின் செயலியக்கம் முக்கியத்துவம் பெறுகின்றது.
- நாடகச் சூழமைவை முனைப்புறுத்தும் வகையில் ஆற்றுகை வெளியில் பாத்திரங்களால் மேற்கொள்ளப்படும் ஆக்கபூர்வமான அசைவுகளே **செயலியக்கம்** ஆகும். ஒவ்வொரு சிறிய அசைவும் நாடகச் செயலியக்கம் ஆகும். அவை கருத்துடன் செய்யப்படும்.
- இச் செயலியக்கத்தை ஒழுங்குபடுத்தி அழகியல் நயப்புடையதாக உருப்பெறச் செய்வதே **செயலியக்க ஒத்திகை** ஆகும்.
- இதனை நெறியாளர் தன் தலையாய பணியாக மேற்கொள்வார்.
- இந்த ஒத்திகை செயன்முறையின் போது செயலியக்கங்களை நினைவில் வைத்திருக்க வேண்டும்.
- அழகியல் ஒருமைப்பாடும் செயலியக்கத் தொடர்ச்சியும் பேணப்படும் போது செயலியக்கம் தாக்கவன்மையான வெளிப்பாடாக அமையும்.

**செயற்பாடு :-** *நீங்கள் கற்ற நாடகக் காட்சி ஒன்றில் பாத்திரங்கள் அசையும் ஒழுங்கை ஒரு தாளில் வரைந்து பாருங்கள். வேறு வேறு பாத்திரங்களிற்கு வேறு வேறு நிறக் கோடுகள் பயன்படுத்தலாம்.*

## நாடக ஆற்றுகையும் மதிப்பீடும்

- ஒத்திகை அனைத்தும் நிறைவு பெற்ற பின்னர் பார்ப்போர் முன்னிலையில் அளிக்கை செய்யும் போது அதனை **ஆற்றுகை** என்பர்.
- ஆற்றுகை செய்வதற்காக அனைத்து விடயங்களையும் ஒழுங்குபடுத்தி தயாராகுதல் வேண்டும்.
- வேட உடைகள், ஒப்பனைகள், காட்சிவிதானிப்பு பொருட்கள், ஒளி- ஒலி விதானிப்பு பொருட்கள், இசைவிதானிப்பு ஏற்பாடுகள், பார்வையாளர் ஒழுங்கமைப்புக்கள், நடிகர்களிற்கான நலச்சேவை ஏற்பாடுகள் எனப் பல விடயங்கள் ஆற்றுகைச் செயற்பாட்டின் பகுதிகளாக கவனத்தில் எடுக்க வேண்டிய விடயங்களாகும்.
- குறித்த நேரத்தில் குறித்த ஆற்றுகை நிகழ்த்தப்படுதல் அரங்க நாகரீகமாகக் கருதப்படுகிறது.

## ஆற்றுகை மதிப்பீடு

- ஆற்றுகை முடிவில் ஆற்றுகையுடன் தொடர்புடைய அனைவரும் பங்குபற்றி ஆற்றுகையின் சாதக, பாதக விடயங்களை பகிரந்து கொள்ளுதலாகும்.
- இது சுய விமர்சனமாகும். பிறரது அபிப்பிராயங்களையும் அறிய இவ்வேளையில் வாய்ப்பு ஏற்படலாம்.
- இவ்வாறான மதிப்பீடு எதிர்காலத்தில் மேடையேற்றப்படும் ஆற்றுகைகளைச் செம்மைப்படுத்த உதவும்.
- மதிப்பீட்டுக்காக பின்வரும் விடயங்களைப் பட்டியலிட்டு நோக்கலாம் :-
  மனதைக் கவர்ந்த காட்சி, மனதைக் கவர்ந்த பாத்திரம், நேர்த்தியான ஒப்பனை, பொருத்தப்பாடான வேட உடை, பிடித்த காட்சி, திருத்தப்பட வேண்டிய விடயங்கள், ஏற்பட்ட இடையூறுகள்….

## ஊமச் சித்திரிப்பு:-

- ஊமம் என்பது நடிகன் வார்த்தைகள் இன்றித் தான் ஏற்கின்ற பாத்திரத்தை சித்திரித்துக் காட்டுதலாகும்.
- உடல்வழிச் சித்திரிப்பு பிரதானமாகப் பயன்படுவதோடு காண்பியவழிச் சித்திரிப்பு, உணர்சிவழிச் சித்திரிப்பு ஆகியனவும் பயன்படும்.
- இசை பயன்படுத்தலாம். சொல்லாடல்கள் பயன்படுத்தப்படாது- குரல்வழிச் சித்திரிப்பு இல்லை.
- உடல் மொழி முக்கியம் பெறுகிறது. அதாவது – உடலின் நிலைகள், உடலின் அசைவுகள், சைகைகள், குறியீடுகள் உடல்மொழியாகின்றன.
- ஊமம் மூலமாக ஒரு செயலை, ஒரு காட்சியை, ஒரு நாடகத்தைச் செய்து காட்டலாம்.
- ஊமச் சித்திரிப்பில் பயிற்சி பெறுவதற்கு அரங்க விளையாட்டுக்கள் சில உதவுகின்றன.
  உதாரணமாக – குருட்டு ஆட்டோ, கரடியும் கிராம மக்களும், தலைவரைக் கண்டுபிடித்தல்…

**செயற்பாடு :-** *குருட்டு ஆட்டோ, கரடியும் கிராம மக்களும், தலைவரைக் கண்டுபிடித்தல் ஆகிய அரங்க விளையாட்டை விளையாடுக.*

*தனியான ஊமச் சித்திரிப்புப் பயிற்சிக்காக பின்வரும் சம்பவங்களைச் செய்து மகிழுங்கள் -- தேநீர் அருந்துதல், மரத்தில் ஏறுதல், தோடம்பழத்தை உரித்துச் சாப்பிடுதல். யானை ஒன்றைக் குளிப்பாட்டுதல்..*

*குழுவாக ஊமச்சித்திரிப்பில் ஈடுபடக் கூடிய சம்பவங்கள் சில – கரப்பந்தாட்டம், வீடு கட்டுதல், பல்பொருள் அங்காடி, உதைபந்தாட்டம்...*

## நாடகப் பாங்கான கவிதையை ஆற்றுகை செய்தல்

- கவிதைகள் காட்சிப் படிமங்களைக் கொண்டவை. மகாகவி உருத்திரமூர்த்தி அவர்களின் கவிதைகள் காட்சிப் படிமங்களோடு சம்பவ வெளிப்பாடுகளைக் கொண்டிருக்கும்.
- மகாகவி உருத்திரமூர்த்தி அவர்கள் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். **கோடை, புதியதொரு வீடு** ஆகிய பா நாடகங்களையும் (கவிதை நாடகங்கள்) எழுதியுள்ளார்.
- அவரது **தேரும் திங்களும், மீண்டும் தொடங்கும் மிடுக்கு** ஆகிய கவிதைகள் ஆற்றுகைப் பண்பு கொண்டவை.
- கவிதையை நாடகப்பாங்குடன் வாசிக்கும் போதும் ஆற்றுகை செய்யும் போதும் பின்வரும் விடயங்களை கருத்திலெடுக்க வேண்டும்:-
  கவிதையின் ஓசைநயம், வெளிப்படுகின்ற கதைப்பொருள், நாடகப்பாங்கான சொல்லாடல், வெவ்வேறான உணர்வு வெளிப்பாடுகள், செயல் நிலைக்குரிய இடங்கள், தொனி வேறுபாடுகள், ஆற்றுகைக்குரிய சந்தர்ப்பங்கள்.
- கவிதையை ஆற்றுகை செய்யும் போது – எடுத்துரைக்கும் பாணியில் ஓதப்படலாம்.
- நடிகன் பாத்திரம் ஏற்று, செயல்களுடன் வெளிப்படுத்தலாம்.
- படிமங்களை உருவங்களாகக் கொண்டு வரலாம், நடிகன் மூலமாக வெளிப்படுத்தலாம்.
- கவிதையின் உள்ளார்ந்த அர்த்தம் வெளிப்பட ஆற்றுகை செய்ய வேண்டும்.
- கவிதையின் கற்பனைத்திறன் படைப்பாக்க அனுபவங்கள் சிறப்புற அமைய வேண்டும்.
- **'மீண்டும் தொடங்கும் மிடுக்கு'** என்ற கவிதை – மழையை மட்டும் நம்பி வாழும் யாழ்ப்பாண விவசாயிகள் எதிர்கொள்ளும் சிக்கல்களை வெளிப்படுத்துகின்றது.
- **'தேரும் திங்களும்'** – சாதி, வர்க்க வேறுபாடுகள் ஏற்படுத்திய கலவரங்கள் பற்றியது.

**செயற்பாடு :-** *'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' 'தேரும் திங்களும்' ஆகிய கவிதைகளை மனனஞ் செய்யுங்கள். இக் கவிதைகளில் வருகின்ற கருத்துக்கள் சிதையாமல் உணர்வுடன் உச்சரியுங்கள். எடுத்துரைஞராக அல்லது கவிதையில் வரும் பாத்திரம் ஏற்று கவிதையை ஆற்றுகை செய்யுங்கள்.*

## கூத்துக்களில் "தர்க்கத் தருக்கள்"

- தமிழர்களின் பாரம்பரிய அரங்க வடிவமாக கூத்துக்களே கருதப்படுகின்றன.
- கூத்துக்கள் ஆடல் பாடல்களை மையமாகக் கொண்டவையாகும்.
- ஆடல்கள் பிரதானமாகக் காணப்படும் இக் கூத்துக்களில், பாத்திரங்களிற்கிடையிலான தொடர்பாடல்கள் பாடல்கள் மூலமாகவே நடைபெறும்.
- இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு பாத்திரங்கள் தமக்கிடையே உரையாடி மோதுகையை வெளிப்படுத்தும் பாடற் பகுதிகளைத் **'தர்க்கத் தருக்கள்'** எனக் குறிப்பிடுகிறார்கள். இதனால் முரண் வளர்த்துச் செல்லப்படும்.
- தர்க்கம் புரியும் எதிரெதிர்ப் பாத்திரங்கள் - *ஒரே பாடல் மெட்டில் தர்க்கம் செய்தல். இருவேறு மெட்டுக்களில் தர்க்கம் செய்தல். ஒரு பாத்திரம் பாடலைக் காலம் குறைத்துப் பாடுதல், மற்றைய பாத்திரம் காலம் கூட்டிப் பாடுதல் எனத் தர்க்கப் பாடல்கள் அமையும்.*
- தர்க்கப் பாடல்களைப் பாடும் போது : –

  பாரம்பரிய மெட்டுக்கள் பிறழ்வுபடாது பாட வேண்டும்.

  சுருதியுடன் தாளப் பிசகின்றிப் பாட வேண்டும்.

  உணர்வின் தொனியுடன், பாத்திரப் பண்புகள் வெளிப்பட்டு, முரண் வளர்த்துச் செல்லுமாறு பாடுதல் வேண்டும்.

**செயற்பாடு :-** *youtube மூலமாக பின்வரும் தர்க்கப் பாடல்களின் காணொளிகளைப் பார்வையிடுங்கள்.*

*-காத்தவராஜன் கூத்தில் - வரமாட்டேன் சின்னான் வரமாட்டேன்...*

*- இராவணேசன் வடமோடிக் கூத்தில் - அப்பனைக் கொன்றவனோடு...,*

*- மலையகக் காமன் கூத்தில் - பொல்லா நல்லோர் கனவு கண்டேன்,....*

*( பாடல்களிற்குரிய அசைவுகள், நிலைகள், தீர்மானம் தீர்த்தல் போன்ற விடயங்களைக் கவனியுங்கள்)*

## காவடி ஆட்டம்.

- 'காவடி' என்ற சொல் **'காவு தடியில்'** இருந்து பிறந்தது.
- கிராமியக்கலை வடிவங்களில் எல்லோராலும் விரும்பப்படும்.
- சிறியவர் முதல் பெரியவர் வரை ஆடப்படுகிறது.
- பக்தி சார்ந்தது என்பதால் ஆலயங்களில் ஆடப்படுகிறது.
- பாற்காவடி, பன்னீர்க்காவடி, புஸ்பக்காவடி, வேற்காவடி எனப் பல்வேறு வகைகள் உண்டு.
- தவில், நாதஸ்வரம், பறை போன்ற வாத்தியங்களுடன் ஆடப்படும்.
- வேட்டி, சால்வை அழகாக அணிந்து குறித்த ஆடல் வகைகளை ஆடுவார்கள்.
- தமிழர்களின் மரபு வழிக் கலை வடிவமான இதனை ஏ.ரி.பொன்னுத்துரை அவர்கள் ஒழுங்கு படுத்தப்பட்ட ஆடல்களாக அமைத்து மேடைக்குரியதாக்கினார் - தாளக் காவடி.

**செயற்பாடு:-** *தோளில் வைத்து இரு கைகளாலும் பிடிக்கக்கூடிய தடியொன்றை வைத்து காவடியாட்டம் ஆடுக. நீர் விரும்பியவாறு காவடி ஒன்று செய்க.*

## கரகாட்டம்

- ‘கரகம்’ என்பது புனித நீர் வைக்கும் குடம் அல்லது செம்பு எனக் கருதப்படும்.
- செம்பினை அழகாக அலங்கரித்து தலையில் வைத்து விழுந்துவிடாமல் இசைக்கேற்ப ஆடுதல் கரகாட்டம் எனப்படும்.
- இக் கரகாட்டம் மழை வேண்டியும் செழிப்பு வேண்டியும் நேர்த்திக்கடனுக்காகவும் ஆடப்படுகிறது.
- பொரும்பாலும் மாரியம்மன், துர்க்கையம்மன், கண்ணகியம்மன் போன்ற தெய்வங்களை நினைத்துச் சிந்துபாடி ஆடப்படுகிறது.
- பறை, உடுக்கு, தவில் போன்ற வாத்தியங்களில் வாசிக்கப்படும் இசைக்கேற்ப ஆடப்படும். இந்தியாவில் நையாண்டி மேளம் பயன்படுத்தப்படுகிறது.
- செம்புக் கரகம், பழனிக் கரகம் (வேப்பிலைகளால் அலங்கரிக்கப்படுவது), தோண்டிக் கரகம் (மண்ணால் செய்யப்படுவது) எனப் பலவகைக் கரகங்கள் காணப்பகின்றன.
- இந்த ஆடல்கள் சடங்கு முறையுடன் தொடர்புபட்டது, எனினும் தொழில் முறையாகவும் ஆடப்பட்டு வருகிறது.

**செயற்பாடு :-** *படங்களைப் பார்த்து வீட்டில் உள்ள பொருட்களின் மூலம் கரகம் ஒன்று தயாரித்துக் கொள்ளுங்கள். அதனைத் தலையில் வைத்து சமநிலைபேணி ஆடுங்கள்.*

## துணைக்கலைகள்

- நாடக பாடமானது ஆற்றுகைப் பாடமாக மாற்றமடைந்து ஆற்றுகையாக உருப்பெறுகிறது.
- ஆற்றுகையின் போது நால்வகைச் சித்திரிப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- ஆற்றுகையின் போது நடிகரின் உடல், குரல் தவிர்ந்த ஏனைய கலைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன.
- காண்பியவழிச் சித்திரிப்பில் துணைக்கலைகளே முக்கியம் பெறுகின்றது – நாடகம் கட்புல செவிப்புலக் கலையாகும்.
- துணைக் கலைகளாக – வேட உடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, இசைகளும் ஒலிகளும், ஒளி விதானிப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம். இவை அழகியற் பண்பை ஏற்படுத்தும்.
- துணைச் சாதனங்களைப் பயன்படுத்தும் போது கற்பனை, படைப்பாக்கத்திறன், தொழிநுட்பத் திறன் அறிவாற்றல் போன்ற வல்லமைகள் முக்கியமாகிறது.
- நாடகத்தின் முழுமையான வெற்றிக்குத் துணைக்கலைகளும் முக்கியமாகின்றன.
- இந்த நாடகத்திற்கு வேண்டிய துணைக்கலைகளின் பட்டியலை ஒழுங்குபடுத்துக.

  உதாரணம்:-

  1) பாத்திரங்களுக்குரிய வேட உடைகள்.

     அரசன், மந்திரி, தளபதி, ஏமாற்றுக்காரர் மற்றும் பிறர்.

  2) பாத்திரங்களுக்குரிய ஒப்பனைகள்.

     அரசன், மந்திரி, தளபதி, ஏமாற்றுக்காரர் மற்றும் பிறர்.

3) நாடகத்திற்குரிய இசைவிதானிப்புக் கருவிகள்.

முரசு, மேளம், பறை, மற்றும் பிற.

4) நாடகத்திற்குரிய ஒளிவிதானிப்புக் கருவிகள்.

பொட்டொளி, பெருக்கொளி, மற்றும் பிற.

**செயற்பாடு :-** *மேற்படி துணைக்கலை விடயங்களை அரசனின் புத்தாடை என்ற நாடகத்திற்காகத் தயார் செய்துபாருங்கள்*

**( இது 2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ள தரம் 08 இற்குரிய ஆசிரியர் வழிகாட்டியின் பாடத்திட்டத்திற்கு அமைவாக மாணவர்களின் சுயகற்றல் தேவைக்காக தயரிக்கப்பட்ட பாடக் குறிப்புக்கள்)**

**பாடத்திட்டத்திற்குரிய ஒளிப்படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை நினைவில் கொள்ளுங்கள்.**



**கவிஞர்.வி.கந்தவனம்.**



**கலாநிதி.க.சிதம்பரநாதன்**



**பேரா.சி.மௌனகுரு**



**குழந்தை.ம.சண்முகலிங்கம்**



**மாவை நித்தியானந்தன்**



**கலாநிதி.சி.ஜெயசங்கர்**



**காவடி ஆட்டம்**



**கரகாட்டம்**



**கூடிவிளையாடு பாப்பா**



**ஆரொடு நோகேன்**